2015 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) திருவாரூர் மத்திய பல்கலைக்கழக கட்டட விபத்து

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒவ்வொருவராக என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) என்னவென்று ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. மு.க. ஸ்டாலின், சொல்லுங்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், திருவாரூர் மத்திய பல்கலைக்கழக கட்டடம் இடிந்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். அது சம்பந்தமாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக கட்சியைச் சார்ந்தவர்கள் காலை 9—47 மணிக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் 10—25 மணிக்கும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்தவர்கள் 9—47 மணிக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் 10—38 மணிக்கும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் 9—47 மணிக்கும், மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் 10—57 மணிக்கும் மற்றும் புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி 10—14 மணிக்கும் ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம். (குறுக்கீடு) இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு முதலமைச்சர் பதில் சொல்லவிருக்கிறார். உட்காருங்கள். நீங்கள் கேட்டதற்குப் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்கிறார். நீங்கள்

உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) கவன ஈர்ப்பு என்றால் Agenda–ல் கொண்டு வரப்படும். நீங்கள் தகவல் கேட்டீர்கள். கேட்டதற்கு, உடனே பதில் சொல்கிறார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் தகவல் கேட்டிருக்கிறீர்கள். நீங்கள் கேட்டதற்கு respond செய்து, மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்கிறார், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், நாகக்குடி வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள மத்திய பல்கலைக்கழக வளாகத்தில், மத்திய பொதுப் பணித் துறை சார்பில் விருந்தினர் மாளிகை கட்டட கட்டுமானப் பணி நடந்து வருகிறது. இந்தக் கட்டடங்கள் கட்டும் பணியை ஐதராபாத்தைச் சேர்ந்த D.E.C. Infrastructure and Projects (India) Pvt. Ltd., என்ற தனியார் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

29–3–2015 அன்று காலை சுமார் 9–00 மணியளவில், விருந்தினர் மாளிகைக்கான கட்டடத்தில், மூன்றாம் தளத்தில், மேற்கூரை கான்கிரீட் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அந்தக் கட்டடத்தின் ஒரு பகுதி திடீரென இடிந்து விழுந்தது. இந்த விபத்தில், பணியில் ஈடுபட்டிருந்த 21 பணியாளர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர்.

இச்சம்பவம் குறித்து, தகவலறிந்ததும், காவல் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர், வருவாய் துறையினர், பொதுப் பணித் துறையினர் மற்றும் மருத்துவக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். மத்திய மண்டலக் காவல் துறை தலைவர், தஞ்சாவூர் காவல் துறை துணைத் தலைவர், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று மீட்புப் பணிகளை மேற்பார்வையிட்டனர்.

மாநிலப் பொதுப் பணித் துறையின் மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் 3 செயற்பொறியாளர்கள், 3 உதவி செயற்பொறியாளர்கள், 5 உதவிப் பொறியாளர்கள், 12 பணி

2015 மார்ச் 30] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]
மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் J.C.P. இயந்திரங்கள் உள்ளிட்ட தேவையான உபகரணங்களுடன் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கட்டட இடிபாட்டில் சிக்கிய 21 பேர் மீட்கப்பட்டு, ஆம்புலன்ஸ்கள்மூலம் திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் 5 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 16 தொழிலாளர்களுக்கு திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் 16 பேர்களில், 10 பேர்களுக்கு எலும்பு மற்றும் சிதைந்த காயங்கள் (Bone and Crush injuries) ஏற்பட்டுள்ளன. திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் தலைமையில் நரம்பியல், எலும்பு, பொது அறுவை சிகிச்சை, மயக்கவியல் போன்ற 12 சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கொண்ட குழு மற்றும் பொது மருத்துவர்கள், பயிற்சி மருத்துவர்கள், முதுநிலை மருத்துவ மாணவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட 60 இதர மருத்துவப் பணியாளர்களுடன் காயம் அடைந்தவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக, சன்னாநல்லூர் வருவாய் ஆய்வாளர் அளித்த புகாரின்பேரில், நன்னிலம் காவல் நிலையத்தில் கு.எண் 63/15–ல் இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 304 (ii), 336 மற்றும் 338 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுமான நிறுவன மேலாளர் மற்றும் களப் பொறியாளர் உள்ளிட்ட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த விபத்தில் பலியான இருவர் ஒடிசா மாநிலத்தையும், ஒருவர் உத்தரப் பிரதேச மாநிலத்தையும் சேர்ந்தவர்களாவர். இரண்டு தொழிலாளர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். இந்த விபத்தில் இறந்த 5 பேரின் குடும்பங்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் தலா 5 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும். காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் 16 பேருக்கும், தலா 50,000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)